දුරකථන / தொலைபேசி / Telephones: 011-2136600, 011-2136650

ලේකම් / செயலாளர் / Secretary: 011-2136602

ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2876169, 011 - 2876181

විද්‍යුත් තැපෑල / மின் - அஞ்சல் / E - mail: info@psc.gov.lk

වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.psc.gov.lk


**රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය**

**அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்**

**OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION**


අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල

இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.

**No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla**


මගේ අංකය / எனது இல. / My No.: PSC/EST/02-03/03/2015

ඔබේ අංකය / உமது இல. / Your No.:

දිනය / திகதி / Date: 2020.01. 09

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 03/2020

அமைச்சு செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்.

<u>ஏதேனும் சட்டத்தின் தேவைப்பாட்டுக்கு அமைய குறித்துரைக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்ரொருவரே வகிக்க வேண்டிய பதவியொன்றை வகிப்பதற்காக உத்தியோகத்தரின் வேண்டுகோளின் பேரில் அரசாங்க சேவையிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்படும் உத்தியோகத்தரொருவரின் அவ்வாறு விடுவிக்கப்படுகின்ற காலப்பகுதி</u>

ஏதேனும் சட்டத்தின் தேவைப்பாட்டுக்கு அமைய குறித்துரைக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்ரொருவரே வகிக்க வேண்டிய பதவியொன்றை வகிக்கும் பொருட்டு உத்தியோகத்தரின் வேண்டுகோளின் பேரில் அரசாங்க சேவையிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்படும் காலப் பிரிவு சம்பளமற்ற லீவுக் காலப் பிரிவாகக் கருதப்படல் வேண்டும். அவ்வாறெனினும், பதவி உயர்வுகள் மற்றும் சேவைமூப்புக்கு இந்த சம்பளமற்ற காலப்பகுதி உத்தியோகத்தரின் செயலுாக்கமுள்ள சேவைக் காலத்தின் ஒரு பகுதியாக கருத்திற்கொள்ளப்படும்.

உத்தியோகத்தரொருவர் விடுவிக்கப்படும் அக்காலப் பிரிவு, உத்தியோகத்தரின் ஓய்வூதியத்தைக் கணிப்பீடு செய்யும் போது ஏற்புடையதாக்கிக்கொள்ளப்படுவது, அக்காலப் பிரிவில் அனைத்து முழுமையான மாதமொன்றுக்கும், அவர் அரசாங்க சேவையில் வகித்த நிரந்தரப் பதவிக்குரிய சம்பளத்திலிருந்து நூற்றுக்கு இருபத்தைந்து வீதத்தை விஞ்ஞாத தொகையை திரட்டு நிதியத்தில் வைப்பிலிடுவதற்காக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்தினால் மாத்திரமே ஆகும். அத்தோடு, விதவைகள் அனாதைகள் பங்களிப்புத் தொகைகளையும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம்.ஏ.பீ. தயா செனரத்
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.